# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 40

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

## எல்லோரும் பனகல் வீரராக!

● பனகல் அரசர்



1920-இல் நடந்த பொதுத் தேர்தலில் வென்று, சுப்பராயலு ரெட்டியார் தலைமையில், அமைந்த முதலாவது நீதிக்கட்சி அமைச்சரவையின் முதலாவது சட்டமன்றக் கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசிய சென்னை மாகாண கவர்னர் வெலிங்டன், “நல்ல நிர்வாகத் திறனும், நற்சிறப்பும் கொண்ட இந்த நாட்டிற்கு உரியவர்கள் கையில் அதிகாரங்களை ஒப்படைப்பதில், நான் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன். இது இந்த நாட்டின் ஜனநாயக வரலாற்றின் துவக்கக் கட்டம் என்றாலும், எதிர்காலத்தில் முக்கிய திருப்பங்களுக்கு இது வழிகோலும் என்று உறுதிகூறுகிறேன்” என்று குறிப்பிட்டார். நிகழவிருக்கும் புதிய வரலாற்றின் துவக்கத்தை மிகச் சரியான முறையில் கணித்தார், கவர்னர் வெலிங்டன்.

207 நாட்கள் மட்டுமே சுப்பராயலு ரெட்டியார் அமைச்சரவை நீடித்தது. உடல்நலம் சரியில்லாததால் 11.07.1921 அன்று முதலமைச்சர் பதவியில் இருந்து விலகிவிட்டார் சுப்பராயலு ரெட்டியார். சில மாதம் கழித்து, நவம்பரில் இறந்துவிட்டார். சுப்பராயலு ரெட்டியார் பதவி விலகிய பின்னர், பனகல் அரசர் ராமராய நிங்கர் முதலமைச்சராகப் பதவியேற்றார். ஏ.பி.பாத்ரோ புதிய அமைச்சராக இணைந்தார். முக்கிய திருப்பங்கள் ஏற்படும் என்ற வெலிங்டனின் கணிப்பை மொத்தம் 5.5 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த பனகல் அரசர் ராமராய நிங்கரின் அரசு நிறைவு செய்தது.

நிலச்சுவான்தார்கள் குடும்பத்தில், 09.07.1866 அன்று பிறந்த இராமராய நிங்கர் சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் படித்தார். 1889-இல் முதுகலைப் பட்டமும் பெற்றார். முதுகலையில் சமஸ்கிருதத்தை விரும்பிப் பயின்று, சமஸ்கிருதப் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். சட்டப்படிப்பும் படித்து, பட்டம் பெற்றார். நில உரிமையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்து, இந்திய நாடாளுமன்றத்தில் இடம்பிடித்து, அரசியல் வாழ்வைத் தொடங்கினார். 1915-ஆம் ஆண்டு வரை அப்பதவியில் நீடித்தார்.

நடேசனார் தொடங்கிய சென்னை திராவிடர் சங்கத்தில் இணைந்து தொண்டாற்றினார். கோல்காபூர் சாகு மகாராஜ் தொடங்கிய பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலும் இணைந்து துணைத் தலைவராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டார்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றம் பெறுவதற்குக் காரணமாக இருந்த, 20.11.1916 அன்று சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள உயர்நீதிமன்ற வழக்கறிஞர் எத்திராஜ் இல்லத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க கூட்டத்திலும் பனகல் அரசர் பி.இராமராய நிங்கார் கலந்துகொண்டார்.

இந்தக் கூட்டத்தின் நீட்சியாக ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’ பிட்டி.தியாகராயர், டி.எம்.நாயர், சி.நடேசனார் ஆகியோர் முன்னெடுப்பில் உருவானபோது பனகல் அரசர் அதில் தன்னை இணைத்துக் கொண்டார்.

### மாநாட்டுத் தலைவராக...

நீதிக்கட்சியின் சார்பில் முதல் பார்ப்பனரல்லாதார் மாநாடு கோவையில் இருந்த ஒரு திரையரங்கில், 1917-ஆம் ஆண்டில் ஆகஸ்டு 19, 20 ஆகிய இரு நாள்கள், நடைபெற்றது. அதே நாளில், ஹோம்-ரூல் இயக்கத்தின் மாநாடும் கோயம்புத்தூரில் நடைபெற்றது. அதேநாளில், இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களுக்குத் தொடக்கமாக அமைந்த இந்தியாவுக்கான பிரிட்டிஷ் அரசின் உள்துறைச் செயலாளர் மாண்டேகுவின் அறிவிப்பு, இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டது.

பார்ப்பனரல்லாதார் மாநாட்டின் தலைவராக பனகல் அரசர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைமையுரை ஆற்றிய பனகல் அரசர், “இந்திய நாட்டின் சார்பாகப் பேசும் உரிமை தமக்கே உண்டெனப் பேசும் நமது எதிரிகள் (பார்ப்பனர்கள்) நம்மை வகுப்புவாதிகளென்றும், பிரிவினைவாதிகளென்றும் புறம் பேசுகின்றனர். தாங்களே இந்திய நாடென்றும், தங்கள் நலன்களே இந்தியாவின் நலன்கள் என்று கருதுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதனால், இந்த மாகாண மக்கள் பெரும்பாலானோரின் சார்பாக இந்த மாநாடு நடத்தப்படுகிறது என்பதைக் காண முடியாத குருடர்களாக அவர்கள் (பார்ப்பனர்கள்) உள்ளனர்” என்று, பார்ப்பனர்களின் இரட்டை நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துரைத்தார்.

**1921-ஆம் ஆண்டு ஜூலையில் பதவியேற்ற பனகல் அரசர் தமிழ்நாட்டைத் தலைகீழாகப் புரட்டிப் போடும் அரசாணைகளை நிறைவேற்ற வெகுகாலம் காத்திருக்கவில்லை.**

“நாங்கள்தான் இந்திய மக்கள் அனைவருக்குமான பிரதிநிதிகள் என்று நம்மை ஏமாற்றி வந்துள்ளனர். அவர்களின் இத்தகைய ஏமாற்று வேலைகள் பற்றி, நம்மில் எவரும் எந்தக் கேள்வியும் கேட்காமல் அமைதியாக இருந்தகாலம் மாறிவிட்டது. அவ்வாறு அமைதியாக இருந்ததற்காக நாமெல்லாம் துன்பப்பட நேர்ந்தது. புரோகிதக் கூட்டத்தின் இரும்புப் பிடியின் கீழ், மூட நம்பிக்கை, பழக்க வழக்கங்களில் நம்மவர் மூழ்கிக் கிடந்தனர். பெரும்பாலோர்க்கு வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை. பார்ப்பனரல்லாதாருக்குக் கல்வி அறிவு பெறுவதற்கான உரிமையும், வாய்ப்பும் வாய்த்திருக்கவில்லை. பார்ப்பனரல்லாத மக்கள், தங்களுக்கு (பார்ப்பனருக்கு) நிரந்தர அடிமைகளாக இருக்கும் வண்ணம் பழைய வேத, சாஸ்திர, புராணங்களுக்கான விளக்கம் அளித்து வந்துள்ளனர்” என்று மிகத் தெளிவாக பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும், பார்ப்பனரல்லாத மக்களின் அடிமை நிலையையும் பனகல் அரசர் விளக்கிப் பேசினார்.

இந்தியச் சமூகத்தில் நிலவும் அனைத்துச் சமூக வேறுபாடுகளையும் சமமின்மைகளையும் நாம் கட்டாயமாக அகற்றியாக வேண்டும் என்பதில், உறுதியாக இருந்தார் பனகல் அரசர். ஜாதி வேறுபாடின்றி அனைவரும் சுதந்திரம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். மதத்தின் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் அடக்குமுறைகளை நீக்குவதில், இலட்சிய வேட்கை கொண்ட பனகல் அரசர் சமூக ஆற்றலைப் பெருக்கி, சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஒரே ஒரு மிக உயர்ந்த ஆற்றல் படைத்த கருவி கல்வி மட்டும்தான் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். உயர்ஜாதியினரின் தனிப்பட்ட உரிமையாக இருந்துவரும் இத்தகைய ஆற்றல்மிக்க கல்வியை, இதுவரை கல்வி அறிவு பெறாத வெகுமக்களுக்கும் அளிக்கவேண்டும் என்பதில், உறுதியுடன் இருந்தார்.

‘வகுப்புரிமை இல்லாத சுதந்திரம் இந்தியாவுக்கு கிடைத்தால், ஆங்கிலேயர் இந்நாட்டுக்கு வருமுன்னர் பார்ப்பனரல்லாதார் எத்தகைய கீழ்நிலையில் இருந்தார்களோ அதே அடிமை நிலைக்கே மீண்டும் தள்ளப்படுவார்கள். வருணாசிரமும் அத்துடன் இணைந்த மனு தர்மத்தின் அடிப்படையிலான தேசியமும் முன்னிலை பெறும். எனவே எல்லாச் சமூகங்களும் சமநிலை எய்திய பின்னரே தன்னாட்சி பற்றிச் சிந்திக்க வேண்டும். அதுவே நலம் பயக்கும்’ என்று பார்ப்பனரல்லாதாரின் நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கிய பனகல் அரசர் வகுப்புரிமையில் தீராத நம்பிக்கையுடன் இருந்தார்.

### இங்கிலாந்து சென்ற குழு

மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கையைத் தொடர்ந்து 1919-இல் பார்ப்பனரல்லாதாருக்கான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோரி, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வாதாட இங்கிலாந்து சென்ற டி.எம்.நாயர் உள்ளிட்டோரைக் கொண்ட நீதிக்கட்சிக் குழுவில், பனகல் அரசரும் சென்றிருந்தார். பல்வேறு சிறப்புமிக்க பனகல் அரசர் குறித்த புத்தகம் திருவாரூர் பள்ளியில் படித்த கலைஞருக்கு அரசியல் அரிச்சுவடியாக மாறியது. பனகல் அரசரைப் பயின்ற கலைஞர் பின்னாட்களில் அவர் வழியில், பார்ப்பனரல்லாதாரின் வகுப்புரிமைக்காக நின்றார்.

பார்ப்பனரல்லாதாரின் இயக்கத்தின் ஒப்பற்றத் தலைவராக விளங்கிய பனகல் அரசர் இறந்த போது தந்தை பெரியார் “மறைந்தார் நமதருமைத் தலைவர், எனினும் மனமுடைந்து போகாதீர்” என்று மனமுருகி மிக நீண்ட இரங்கல் உரை எழுதினார். தந்தை பெரியார் எழுதிய இரங்கல் உரைகளில் பனகல் அரசருக்கு எழுதிய உரையே, மிக நீண்டதாக இருக்கக் கூடும். 1921-ஆம் ஆண்டு ஜூலையில் பதவியேற்ற பனகல் அரசர் தமிழ்நாட்டைத் தலைகீழாகப் புரட்டிப் போடும் அரசாணைகளை நிறைவேற்ற வெகுகாலம் காத்திருக்கவில்லை.

...குரல் ஒலிக்கும்

---

### பொய்யர்களின் பொய்ப்புயல்!

ஃபெஞ்சல் புயலை விட ‘போட்டோஷாப்’ செயலியில் கட்சி நடத்துபவர்களின் பொய்ப்புயல் சமூகத்திற்குப் பேராபத்தானதாக இருக்கிறது. புயலால் கனமழை தொடங்கிய நாளில் இருந்தே தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் கழகத்தின் மக்கள் பிரதிநிதிகள் களத்தில் நிற்கின்றனர். அது குறித்த செய்திகள் காட்சி ஊடகங்களில் நொடிக்கு நொடி வந்ததை மக்கள் அறிவர். குறிப்பாக புயல் கரையைக் கடந்ததில் இருந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், காலையில் இருந்து இரவு வரை களத்தில் இருந்தார். அவருடைய அதிகாரப்பூர்வ சமூக வலைதளப் பக்கத்திலும் உடனுக்குடன் விவரங்கள் பகிரப்பட்டன. ஆனால், அன்றைய தினம் அவர் புயல் நிவாரணப் பணிகளில் ஈடுபடவில்லை என்பதுபோல, போலிச் செய்தி பரப்பப்பட்டது.

அதுமட்டுமல்ல, பெங்களூரு, வியட்நாம், அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணம், சவூதி அரேபியாவின் ஜெத்தா உள்ளிட்ட பல இடங்களில் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புப் படங்கள், காணொளிக் காட்சிகளை எல்லாம் ஃபெஞ்சல் புயலால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட பாதிப்பு எனத் திட்டமிட்டு சமூக ஊடகங்களில் பரப்பினர். அதன்மூலம், தி.மு.க. அரசுக்கு நெருக்கடி அளிக்க வேண்டும் என்பது அவர்களது எண்ணம். மழை வெள்ள பாதிப்புகளில் இருக்கும் மக்களை நம்பிக்கையிழக்கச் செய்ய வேண்டும் என்கிற ‘கீழமை’ அரசியல் வெளிப்பாடாக அந்த வீடியோக்கள் இருந்ததை உண்மை சரிபார்ப்புக் குழுக்களால் உடனுக்குடன் அம்பலப்படுத்தபட்டன.

இத்தகைய பொய்ச் செய்திகள், வதந்திகளைப் பரப்புவதில் பா.ஜ.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையில் போட்டாபோட்டியே நடக்கிறது. போலிச் செய்திகள், வதந்திகளால் குஜராத்தில், உத்தரப் பிரதேசத்தில் பல கலவரங்களை நடத்திப் பழகியவர்கள் அதேபோன்ற உத்தியை தமிழ்நாட்டில் நிகழ்த்தத் துடிக்கின்றனர். ஆனால், அவை தமிழ்நாட்டில் ஒருபோதும் எடுபடாது என்பதை அவர்கள் இதுவரை உணரவில்லை. வதந்தி வீடியோ, பொய்ச் செய்திகளை மக்கள் புறக்கணிப்பது அவர்களின் இயல்பான உண்மை அறியும் பண்பாக தமிழ்நாட்டில் வளர்ந்துள்ளது. வளர்த்தது திராவிட அரசியல். திராவிட அரசு மீது நிகழ்த்தப்படும் தாக்குதலை மக்களுடன் இணைந்து அம்பலப்படுத்தும் ‘உண்மையறியும் குழுவினர்’, நம்பிக்கை விதைக்கின்றனர்.

---

### ஃப்ளாஷ்பேக்



#### வாழ்வின் பொன்னாள்!



அ.அசோக்

2011-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் தேதி எங்கள் மூத்த மகள் அஞ்சுக கமலம், பொறியியல் பட்டப் படிப்பு முடித்து, வளாகத் தேர்வில் தேர்வாகிப் பணியில் சேர்வதற்குரிய ஆணையைப் பெற்றார். அதைத் தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற குடும்பமாகச் சென்றோம். அப்போது புகைப்படம் எடுப்பவர் அருகில் இல்லாததால், என் மகள் விருப்பத்துக்காக உதவியாளர் மூலம் கைப்பேசியில் புகைப்படம் எடுக்கச் சொல்லி, அதனை வாங்கிப் பார்த்து மகிழ்ந்தார்கள். நாங்களும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். அந்த நாள், எங்கள் வாழ்வில் என்றும் நினைவில் இருக்கும் பொன்னாள்.

**– அ.அசோக், மேனாள் அவைத்தலைவர், பாளை பகுதி தி.மு.க.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

### கருவூலம்

#### தமிழ் கட்டாயப் பாடம்!


2006-ஆம் ஆண்டு, கலைஞர் ஆட்சிக் காலத்தில் பள்ளிக் கூடங்களில், தமிழ்ப் பாடத்தைக் கட்டாயமாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தது, தமிழ்நாடு அரசு. 2006-07-கல்வி ஆண்டிலிருந்து ஒன்றாம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை படிப்படியாகப் பள்ளிக்கூடங்களில் தமிழ் ஒரு பாடமாகக் கட்டாயமாக்கப்படும் என அறிவித்தார் கலைஞர். இதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், ‘தமிழ்நாடு அரசு கொண்டு வந்த உத்தரவு செல்லும்’ எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

679

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131